*06.06.2022*

***OS 256 /2017***
***PW-1 Cross – ஹனீபாபீவி***

1969-ம் ஆண்டு 10வது விதி 4ம் பிரிவின்கீழ் திரு.**தி.கணேஷ்,** பி.ஏ., பி.எல்., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் தெற்கு முகமதியார் வீதியில்தான் வசித்து வருகிறேன். நெல் மற்றும் ரைஸ் மில் வியாபாரம் எங்களுக்கு உண்டு. ஏற்கனவே தாயார் அம்மாளிடம் திட்டக்குடி - விருத்தாசலம் பிரதான சாலையில் ஒரு வீடு வாங்கியுள்ளோம் என்று சொன்னால் சரிதான். அந்த காலத்தில் அந்த சொத்தை ரூபாய் 35,000/- வாங்கினோம் என்றால் மதிப்பு ஞாபகம் இல்லை. அந்த சொத்தை 1400 சதுர அடி என்றால் இருக்கலாம். மொத்த சொத்திற்குதான் ரூ.35,000./ என்று பேசி கிரையம் செய்தோம். அதனால் ஒரு சதுர அடி ரூ.3.25 என்றால் சரிதான் அதே போல் கிட்ட தட்ட 25 1/4 செண்ட் நிலத்தை ரூ.35,000/ கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். நானும், என் குமாரர்களும் சொத்தை கிரையம் பெற்றோம். அதன் பின்பும் தாயார் அம்மாளிடம் சொத்தை கிரையம் பெற்றோம் என்று சொன்னால் சரிதான். முதல் ஆவணத்திற்கு பின்புறம் 2-வதாக வாங்கிய சொத்து என்றால் சரிதான். 2-வதாக வாங்கிய சொத்தின் கிரைய மதிப்பு 40,000/- என்றால் சரிதான். அந்த இடத்திற்கு கிழக்கே உள்ள சொத்தின் வழக்கு சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்து கீழ் மேல் 19 1/4 மற்றும் தென் வடல் 19 1/4 அடி ஆகும். கிரைய ஒப்பந்த சொத்தின் விஸ்தீரினம் எனக்கு ஞாபகம் இல்லை. கிரைய ஒப்பந்த சொத்தின் நீள அகல மற்றும் மொத்த விஸ்தீரினம் எனக்கு ஞாபகம் இல்லை. 1-ம் பிரதிவாதி என் சொத்திற்கு முன்புறமாக உள்ளார். 1-ம் பிரதிவாதி வீட்டிற்கு பின்புறம் தாயார் அம்மாள் உள்ளார். தாயார் அம்மாள் அந்த இடத்தில் தான் இறக்கும் வரை 1999-ம் ஆண்டு வரை இருந்தார். கிரைய ஒப்பந்தத்தை சதுர அடி கணக்கில்தான் பேசினோம். வா.த.சா.ஆ1 -ல் கண்ட 2259 சதுர அடி சொத்தை சதுரஅடி கணக்கில்தான் கிரையம் பேசினோம். ஒரு சதுர அடி எவ்வளவு கிரையம் பேசினோம் என்றால் ஞாபகம் இல்லை. முதல் 2 சொத்துக்களை

ரூ.35,000/- மற்றும் ரூ.40,000/- ற்கு வாங்கி விட்டு கிரைய ஒப்பந்த சொத்தை மட்டும் ஏன் ரூ.1,25,000/-க்கு கிரையம் பேசினார் என்றால் அந்த தொகையை தாயார் அம்மாள்தான் எங்களிடம் கேட்டார். அந்த தொகையை தாயார் அம்மாள் வழக்கு அ பட்டியல் சொத்தில் வைத்து வா.த.சா.ஆ1. தேதியில் மதியம் கேட்டார். அன்றைய தேதியில் தாயார் அம்மாளிடம் ரூ.50,000 கொடுத்தோம். சமார் 1 வாரம் மீண்டும் ரூபாய் 50,000 கொடுத்தோம். மீதி ரூ.25,000/- தாயார் அம்மாளிடம் கொடுக்கவில்லை. கிரைய ஒப்பந்ததிற்கான முத்திரை வில்லைகளை அன்றைய தேதியில் பெண்ணாடத்தில் வாங்கினோம். தாயார் அம்மாள் கடன் உள்ளதால் சொத்தை விற்பதாக கூறி தொகை பெற்றார். வா.த.சா.ஆ 1 கிரைய ஒப்பந்திற்கான முத்திரை வில்லைகளை 1986-ம் ஆண்டு வாங்கியதாக உள்ளது என்றால் அதனை ஆண்மக்கள் வாங்கி இருப்பார்கள், எனக்கு அதுப்பற்றி தெரியாது. வா.த.சா-ஆ 1 பக்கம் 3 மற்றும் 4-ல் கடன்களை 31.12.1988க்குள் நாங்கள் அடைக்க வேண்டும் என்று எழுதி உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கடன்களை பைசல் செய்ததற்கான ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை. நான் தொகைகளை தாயார் அம்மாள் மகன் தம்புசாமி மற்றும் தாயார் அம்மாளிடம் கொடுத்தோம். தாயார் அம்மாளிடம் ரூ.50,000-மும், தம்புசாமி அடுத்த முறை கடன் அடைக்கவேண்டும் என்று கூறி ரூ.50,000 பெற்று சென்று விட்டார். தாயார் அம்மாள் பேத்தியை கள்ளக்குறிச்சி வேணு செட்டியாருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் கள்ளக்குறிச்சியில் அவர் வசிப்பது தெரியும். ஆனால் அவர் கணவர் பெயர் தெரியாது. தாயார் அம்மாள், தம்புசாமி மற்றும் அவரது மனைவி ஆகியோர் உயிருடன் இல்லை. வேணு செட்டியார் உயிருடன் உள்ளாரா என்று தெரியாது. சிதம்பரம் மாவட்ட பதிவாளரிடம் விசாரணைக்கு நானும், தாயார் அம்மாளும் சென்றோம் என்று சொன்னால் சரிதான். அதேபோல் நபீயா மற்றும் நவாப்ஜான் ஆகியோர் அன்று வாக்குமூலம் அளித்தார்கள் என்றால் சரிதான். மாவட்ட பதிவாளரிடம் மனு தாக்கல் செய்யும்போது வா.த.சா.ஆ 1 தாக்கல் செய்யவில்லை. பின்னர் தாக்கல் செய்தேன். மாவட்ட பதிவாளர் இரண்டு ஆண்டு காலமாக வா.த.சா.ஆ 1 கிரைய ஆவண ஒப்பந்தத்தை ஆஜர் செய்ய

சொன்னார் என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ 1ஐ வரைவு செய்த தங்கராசு தற்போது உயிருடன் இல்லை. வா.த.சாஆ 1 ஆவணத்தை ஆஜர் செய்ய மாவட்ட பதிவாளர் பலமுறை கூறியும் ஆஜர் செய்யாமல் 3 ஆண்டுகள் கழித்து வரைவு செய்த தங்கராசு இறந்த பின்னர் தாக்கல் செய்தோம் என்று சொனனால் சரியல்ல.

(1-ம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது. )

| |
|---|
| Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.<br><br>Sd/-T.Ganesh,06.06.22<br>Subordinate Judge,<br>Tittagudi. |